| |
|---|
| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru. Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai |
| Date: 07.04.2025 |
| வழக்கு எண்: STC.No. 892/2023 |
| வழக்கு சாட்சி : PW6 |

| | |
|---|---|
| பெயர் : திரு. அழகர்சாமி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. பெருமாள் | தொழில் : |
| கிராமம் : மாலைக்காட்டுபட்டி | சமயம் : |
| தாலுக்கா : மருங்காபுரி | வயது : 46 /2025 |
| ( எதிரி ஆஜர் இல்லை, வழக்கறிஞர் ஆஜர் கு.வி.மு.ச. 317 மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ) | |

-----------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

**1.** நான் மேற்பட்டி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் டீ கடையில் வேலை செய்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். சுமார் 2 வருடத்திற்கு முன்பு நான் கடைக்கு வேலைக்கு செல்வதற்காக மணியங்குறிச்சி பஸ்டாப் அருகே சென்று கொண்டிருந்த போது போலிசார் நின்று கொண்டிருந்தார்கள். கூட்டமாக இருந்தது நான் என்னவென்று கேட்டபோது 2 நாட்களுக்கு முன்னர் அந்த இடத்தில் விபத்து நடந்ததாக சொல்லி படம் வரைந்து எழுதிக்கொண்டிருந்தார்கள். எழுதியதாளில் நானும் செல்வம் என்பவரும் கையெழுத்து செய்தோம். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 –ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை போலிசார் விசாரித்தார்கள்.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.**அ.சா.1 விஜயலெட்சுமி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். காவல்

நிலையத்தில் எனது பெயர், முகவரி போன்றவைகள் யார் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் சென்று நான் கையொப்பம் செய்யும் போது எனது பெயர் முகவரி போன்ற விபரங்கள் ஏற்கனவே எழுதியிருந்ததை பார்த்து தான் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். என்னோடு சேர்ந்து செல்வம் என்பவரும் கையொப்பம் செய்தார். செல்வம் என்பவர் எப்பொழுது கையெழுத்து போட்டார் என்ற விபரம் எனக்கு தெரியாது. விஜயலெட்சுமியின் கணவர் பெயர் அழகர்சாமி என்பது எனக்கு தெரியும். விபத்து நடந்த விபரம் எனக்கு தெரியாது. எனக்கு எந்த விபரமும் தெரியாது கையெழுத்து கேட்டார்கள் கையெழுத்து மட்டும் செய்தேன்.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/–R.Ashokumar,B.Com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.